

ராஜ பீடி கம்பெனி, கொம்பு-14.

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (6-7-66) இதழ் 146

ராபவ ஆனி 22 ரபி அவ் 16 புதன்கிழமை



ராஜ பீடி கம்பெனி கொழும்பு-14

பிரதமர் சமரசத் திட்டத்தை

# லண்டன் அதிபர்கள் ஏற்றுக்கொண்டனர்

## வங்கி ஊழியர் எந்தநிமிடத்திலும் வேலைக்குத் திரும்பலாம்

### யூனியன் நிர்வாகசபை இன்று கூடுகின்றது

கொழும்பு, புதன்

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவும் தொழில் மந்திரி திரு. எம். எச். முகம்மதுவும் நேற்றுமுன்தினம் வங்கி ஊழியர்களின் பொது வேலைநிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காகத் தெரிவித்திருந்த சமரசத்திட்டத்தை நாஷனல் அன்ட் கிறின்லேஸ் வங்கியின் லண்டன் அதிபர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டதாக செய்தி கிடைத்துள்ளது.

வங்கி நிர்வாகம் இச் சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதால் நாடு பூராவிலும் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள வங்கிஊழியர்கள் எந்த நிமிடத்திலும் மீண்டும் வேலைக்குத் திரும்பக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

சமரசத் திட்டத்தை நேற்று முன்தினம் வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் பிரதமர் முன்னிலையில் முதலில் ஏற்றுக்கொண்டார்கள் எனினும் வங்கி ஊழியர் சங்கத்தின் செயற்கமிட்டியும், பொதுசபையும் நிராகரித்துவிட்டன. அதன் காரணமாக நாடு பூராவும் சுமார் 4500 வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். நாஷனல் அன் கிறின்லேஸ் வங்கியின் இலங்கை நிர்வாகிகளும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் லண்டனில் உள்ள தமது அதிபர்களின் முடிவை அறியாமல் எந்த முடிவுக்கும் வர அவர்கள் தயாராய் இருக்கவில்லை.

**சமரசத்திட்டம்**

பிரதம மந்திரி முன்னிலையில் தொழில் மந்திரியால் சமர்ப்பிக்கப்பட்ட சமரசத் திட்டத்தில், நாஷனல் அன் கிறின்லேஸ் வங்கி மூன்று உயர்தர மேற்பார்வையாளர்களுக்கான பதவிகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் பதவி ஒப்பந்தங்கள் சம்பந்தமாக வர்த்தக வங்கிகளின் சங்கத்துக்கும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஜூலை 15-ம் திகதிக்குள் முடிவடைய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கூ. மொ. வி.

## விசாரணையின் எதிரொலி

### ஒருவருக்கு கல்தா; இருவருக்கு இடமாற்ற ; மேலுமொருவருக்கு தற்காலிக வேலைநீக்கம்!

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாண கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் பல நிர்வாக ஊழல்கள் நிலவி வருவதாக பலர் புகார் செய்ததைத் தொடர்ந்து கொழும்பு கூ. மொ. வி. ஸ்தாபனத்திலுள்ள கணக்கு பரிசோதனைப் பகுதியினர் திரு. எஸ். நவரத்தினராஜவின் தலைமையில் யாழ். கூ. மொ. வி. நிலையத்தில் நடாத்திய விசாரணையை தொடர்ந்து தற்பொழுது ஒருவர் வேலையில் நின்றும் நீக்கப்பட்டதுமல்லாமல் இருவர் வெளியிடங்களுக்கு மாற்றப்பட்டதுடன் மேலும் ஒருவர் வேலையில் நின்றும் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக மேலும் ஓர் விபரமான விசாரணை நடாத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

யாழ். கூ. மொ. வி. நிலையத்தில் ஊழியர்களாக கடமையாற்றிய திரு. பேரின்பராசா வேலையில் நின்றும் நீக்கப்பட்டுள்ளார். திரு. துரைசிங்கம் தற்காலிகமாக வேலையில் நின்றும் நீக்கப்பட்டுள்ளாரென்றும் திருவாளர்கள் காசிநாதனும், யோகநாதனும் முறையே கொழும்பிற்கும் கல்முனைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

நாலு வருடங்களுக்கு மேல் இங்கு கடமையாற்றிய ஊழியர்களும் இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

(ந. நி.)

நெடுந்தீவு சம்பவ

## சிறுவர்கள் எவருமே கண்டுபிடிக்கப்படவில்லை!

யாழ்ப்பாணம், புதன்

நெடுந்தீவு கிழக்கு கரையோரத்தில் கட்டுமரத்தில் விளையாடிக் கொண்டிருந்து காணமற்போன நாலு சிறுவர்களையும், கட்டுமரத்தையும் கடற்படை அதிகாரிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரே சூழில் ஒன்பது குழந்தைகள்

டாக்கா, ஜூலை 5

இங்குள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் ஒரு தாய் ஒரே சூழில் ஒன்பது பிள்ளைகளைப் பிரசவித்தார். தாயும் குழந்தைகளும் சுகமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட தாய்க்கு இதற்குமுன்னர் ஒரே சூழில் ஒரு குழந்தை மட்டுமே பிறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட்

நோட்டிங்கம், ஜூலை 5

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே நடைபெற்ற மூன்றாவது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தியா 139 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

**ஸ்கோர்**

முதல் இனிங்ஸ்

மேற்கிந்தியா—235

இங்கிலாந்து—325

இரண்டாவது இனிங்ஸ்

மேற்கிந்தியா—5/482

இங்கிலாந்து—253

## யாழ்ப்பாணத்தில் சிறுவர் நூல் நிலையம்

### விரைவில் தொடங்க ஆசிய பவுண்டேஷன் ஸ்தாபனம் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொதுஜன நூல் நிலையத்தில் சிறுவர்க்கான நூல் நிலையப் பகுதியொன்றை ஆரம்பிப்பதற்கு செய்யப்பட்ட முயற்சி இப்பொழுது நிறைவேறுவதற்கான வழிவகைகள் உருவாகிவிட்டன.

சிறுவர் நூல்நிலையத்திற்கு உதவியளிக்க ஒப்புக்கொண்ட ஆசியா பவுண்டேசன் ஸ்தாபனத்தின் உதவிப் பிரதிநிதி திரு. ஜே. எச். பிளேட் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நூல்நிலையக் கட்டிடத்தைப் பார்வையிட்டார்

இதன்பின் சிறுவர் நூல் நிலையத்துக்கென பத்தாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்குவதற்கும் 9.500 ரூபாய் பெறுமதியான ஆங்கிலப் புத்தகங்களையும் ஆயிரத்து எண்ணூறு ரூபாக்கு தமிழ்ப் புத்தகங்களை வாங்குவதற்கும் ஆசியா பவுண்டேசன் ஸ்தாபனம் ஒப்புக்கொண்டுள்ளது இவை தவிர அந்த ஸ்தாபனம் தனது புத்தகங்களையும் வழங்கும்.

## கைப்பற்றப்பட்ட ஜவுளிகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன

யாழ்ப்பாணம், புதன்

சில தினங்களுக்கு முன் ஆனையிறவு தடுப்புக்கடவையில் கள்ளக்கடத்தல் என்ற சந்தேகத்தின்மீது பொலிசாரால் ஒரு லொறியிலிருந்து கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்ட ஜவுளிகள் விசாரணையின் பின் அவற்றின் உரிமையாளரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியானதெனக் கருதப்பட்ட இந்த ஜவுளிகள் 'கோட்டா'வுக்குரியவைகள் என விசாரணையின் போது நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவை திருப்பிக் கொடுக்கப்பட்டன.

## ஆர்ப்பாட்டம் ஊர்வலம் ஆகியவைக்குத் தடை!

கொழும்பிலும் மற்றும் மாகாணங்களிலுமுள்ள வங்கிகளின் முன் ஆயுதந் தாங்கிய பொலிசார் காவல் புரிகின்றனர் கொழும்பில் ஆயுதந்தாங்கிய பொலிசார் ரோந்து புரிகின்றனர்

வேலை நிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர் சுலோக அட்டைகளைத்தாங்கியவண்ணம் தங்கள் வங்கிகளின் முன் நிற்கக்காணப்பட்டனர்

வங்கி ஊழியரின் வேலை நிறுத்தத்தை உத்தேசித்து ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் யாவற்றையும் பொலிசார் தடை செய்துள்ளனர்.

கொழும்பில் இராணுவத்தினர் ரோந்து புரிந்தனர். களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்திலிருந்து கொழும்பு நகரப் பொலிசாருக்கு உதவியாக பொலிசார் அனுப்பப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**லிகிதர்**

சின்னக்காடு பயிர்ச் செய்கைக்குழுவுக்கு லிகிதரும் கமனிதானேயாருமாகக் கடமையாற்ற ஒருவர் தேவை. முப்பது (30) வயதுக்குட்பட்டவராகவும் J. S. C. (தமிழ்) சித்தியடைந்து ஆங்கிலம் எழுதவாசிக்கத் தெரிந்தவராகவு மிருக்கவேண்டும். சம்பளம் (எல்லாமுட்பட) 75 ரூபா. இம்மாதம் 22-ம் திகதிக்கு முன்னர், தலைவர் சின்னக்காடு பயிர்ச் செய்கைக்குழு, மூன்றும் வாய்க்கால் பரந்தன் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். (ஒ-ம்) தெய்வேந்திரா துரைச்சுவாமி, தலைவர், சின்னக்காடு ப. செ. குழு. 724

**விற்பனையாளர்**

எமது உற்பத்திப்பொருட்களை விற்பனைசெய்ய பெண்கள் வேண்டும். பிணை ரூபா 250/- கட்டவேண்டும். கணக்குகள் எழுதத் தெரிந்தவர் தகுந்த பிணையுடன் விண்ணப்பிக்கவும். பிருங் பிறடக்ஸ் (Frank Products) கொக்குவில். 723

## விற்பனைக்கு

பொது அறிவு வினா-விடை சகல அரசினர் பகிரங்கப் பரீட்சைகளுக்கும் உரிய கை நூல் விலை ரூபா 2/- ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் 727

## கல்வி

**மெக்கானிக் பாடங்கள்**

மோட்டார் டிரக்டர் டீசல் மெக்கானிக் பாடங்கள் நவீனமுறையில் (6) ஆறு மாதகாலத்தில் முழுநேரப் பயிற்சியளிக்கப்படும். விபரங்களுக்கு 15-7-66-க்கு முன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும். போதனாஆசிரியர் 41, கோயில் வீதி (Temple Rd.) யாழ்ப்பாணம். 725

**வகுப்புகள்**

பாலர் வகுப்புகள், தையல், சங்கீதம், நடனம் முதலிய வகுப்புகளுக்கான பிரவேசங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 718


REGAL—JAFFNA
NOW SHOWING
Sean Connery - as "James Bond" in
**From Russia With Love**
(Techni Color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர் - சாவித்திரி நடித்த
**வேட்டைக்காரன்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி நடித்த
**கப்பலோட்டிய தமிழன்**


## நேர்முகப் பரீட்சை

சங்கானை, செவ்வாய்

நேற்றுத்தொடக்கம் காங்கேசன்துறை நகர்காவலர் நிலையத்தில் யாழ் பொலிஸ் அதிபர் திரு. எஸ். தளையசிங்கம் தலைமையில் நகர்காவலர்க்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. தொடர்ந்து சில தினங்களுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும் எனத் தெரிகிறது.

## மீலாத்விழா

புத்தளம், புதன்

கல்லப்பிட்டி — சின்னக்குடியிருப்பில் இன்று மாலை மீலாத்விழா கொண்டாடப்படுகிறது. அகில உலக இஸ்லாமிய காங்கிரஸின் இலங்கைத் தலைவரும், தொழில்மந்திரியுமான திரு. எம். எச். முகமது இவ்விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். திரு நெய்னா மரைக்கார் தலைமை வகிப்பார்.


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

பி. ப. 2, 6, 9-30 மணி

ஆடலழகி **ஜெயலலிதா,**
புதுமுகம் **ஸ்ரீகாந்த்**
நிர்மலா, மூர்த்தி, ஆஷா
மற்றும் பலர் நடித்த
சித்திராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்
**"வெண்ணிற ஆடை"**
(ஈஸ்ட்மன் கலர்)

இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


## "மக்களை நல்வழியில் திருத்த உதவவேண்டும்"

கோண்டாவில், செவ்.

சன சமூக நிலையங்கள் மக்களை நல்வழியில் அழைத்துச் செல்லும் ஸ்தாபனமாக இயங்கவேண்டும். இந் நிலைய உத்தியோகஸ்தர்களிடையே போட்டி பூசல்களோ, கட்சிப்பூசல்களோ இருக்கக்கூடாது. மக்களுக்குச் சேவைசெய்யவேண்டு மென்ற நோக்கத்தோடு செயலாற்றவேண்டும்.

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சன சமூக நிலையத்தில் நடைபெற்ற விவேகானந்தர் நினைவுவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. சி. க. கனகலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், இறைவருட்சக்தியிருந்தால் நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. சுவாமி விவேகானந்தர் ஒன்றும் தெரியாதநிலையிலும் குருதேவரின் கட்டளைப்படி சிக்காகோ நகரிற்குச் சென்று அன்னை பராசக்தியின்கடாட்சத்தால் கேட்டோர் வியக்கக்கூடிய சொற்பொழிவாற்றியது இதற்குச் சான்ருகும். மதத்தலைவர்களை நினைவு கூருமுகமாக விழாக்கள் எடுத்தால் மட்டும்போதாது அவர்கள் காட்டிய மார்க்கத்திலும் ஒழுகவேண்டும் என்று கூறினர்,

திருவாளர்கள் ரி. புஷ்பலிங்கம், ந. பரராசசிங்கம், இ. சிவனேஸ்வரன், து. இராமச்சந்திரன், முத்துலிங்கம். பொ. தனபாலசிங்கம் நா. க. கனகலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## உதவி இன்ஸ்பெக்டர் தற்காலிக வேலைநீக்கம்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

ஸலியத்தை பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ரூாகுல டி' சில்வா தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார் இந்த தற்காலிக வேலைநீக்க உத்தரவை ஐ. ஜி பி. திரு. ஜோன் அட்டிகலை நேற்று அவசர அறிவித்தலாக பிறப்பித்தார்.

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரகுல டி' சில்வாமீது 6 மாதங்களுக்கு முன் செய்யப்பட்ட ஒரு குற்றச்சாட்டு விசாரணை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிகிறது.

திரு. ரகுல டி' சில்வா தனது பதவியை துர்ப்பிரயோகம் செய்து தன்வீட்டு விஷயங்களில் தலையிட்டதாக வத்தளையைச் சேர்ந்த திரு. எவ். ஜே. ஏ. பவி புகார் செய்திருந்தார்.

## தமிழ்ப் பண்பாடு பற்றி இந்திரா

திருச்சி, ஜூலை 5

"தமிழர் பண்பாடு மிகத் தொன்மையானது. அதைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ளவேண்டும்" எனப் பிரதமர் இந்திரா காந்தி திருச்சி பொதுக்கூட்டத்தில் கூறினர்.

தொன்மையான தமிழர் பண்பாட்டுக்குக் கேந்திரமாய் திருச்சி விளங்குகின்றது. இம்மாதிரிப் பழம் பெரும் கலாச்சாரங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ இடுக்கண்களையும், ஆபத்துக்களையும் தாங்கி, ஓங்கிநிற்க நாட்டுக்கு வலிமை தந்துள்ளது என்றும் அவர் கூறினர்.

## ரயில் தடம் புரண்டது

புதுடில்லி, ஜூலை 5

வடகிழக்கு எல்லை ரயில் ... ன்று நேற்றுத் தடம்புரண்

# விளம்பரம்

## கேள்விப்பத்திர அழைப்பு அறிவித்தல்

இதனடியில் காணப்படும் இருவேலைகட்கும் 1966-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ந் திகதி மு ப 10-00 மணி வரையும் என்னல் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் ரூபா 50/-ஐ இச்சபைக் காரியாலயத்தில் செலுத்தியதன் பேரில் இணைப் பிரதிகளாக 19-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும்வழங்கப்படும் பத்திரங்களிலேயே கேட்கப்படலிவேண்டும்.

மூலப்பிரதி எனக்கும், இணைப்பிரதி உ. ஆ. உ. ஆணையாளர், வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணத்துக்கும் ஒரே திகதியில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம்அனுப்பப்படல் வேண்டும்.

வேண்டிய மற்றைய விபரங்களும், படப் பிரதிமைகளும் இச்சபைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் நேரில் பார்வையிடலாம்.

(1) கண்டாவளைத் தெரு அமைத்தல்.

(2) கரடிப்போக்குச் சந்தைக் கட்டிடத்தைப்பொது நூல்நிலையக் கட்டிட உபயோகத்துக்குமாற்றிஅமைத்தல்.

வீ ஆனந்தசங்கரி
அக்கிராசனர்
கரைச்சிக்கிராமசபை.
கிளிநொச்சி,
4—7—66. 642

## 'கடன்கள் வழங்குவது பெருநஷ்டம்'

கொழும்பு, செவ்.

'குடிசைக் கைத்தொழில் சம்பந்தமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் அதற்காக தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுவரும் கடன்கள் அரசாங்கத்திற்கு பெருநஷ்டமாகவே இருந்து வருகிறது' என்று ஆடிட்டர் ஜெனரல் திரு. பி. எஸ். டபிள்யு. பெர்ணந்தோ கிராமஅபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகாவின் 1961-62-ம ஆண்டு நிதிநிலைமைபற்றி குறிப்பிடுகையில் தெரிவித்துள்ளார்.

## இரகசியப் பேச்சு

புக்காரஸ்ட், ஜூலை 5

வார்ஸா ஒப்பந்த உச்சித் தலைவர்கள் மகாநாட்டின் கூட்டத்தைத் தொடர்ந்து, சோவியத் தலைவர்கள் ருமேனியத் தலைவர்களுடன் நேற்று மூன்றுமணி நேரம் இரகசியப் பேச்சுக்கள் நடத்தினர்கள்.

## லொறிச் சலார்

**சிறுபோகம்**

பின்வரும் லொறிச்சலார் நிரப்பி 20-7-66 புதன்கிழமை 12 மணிக்கு முன்னதாக 'ரெண்டர்' என குறிப்பிட்டு, தலைவர் அக்கராயன் குளம் ப. நோ. கூ. ச. கிளிநொச்சி என விலாசமிட்டு அனுப்புதல்வேண்டும்.

1. அக்கராயனிலிருந்துபரந்தன் ஜி. பி. எஸ் பரந்தனுக்கு மூடை ஒன்றிற்கு எவ்வளவு,

2, அக்கராயனிலிருந்து கிளிநொச்சி ஸ்டேஷனுக்கு மூடை ஒன்றிற்கு எவ்வளவு.

3. ஏற்றுக்கூலி மூடை ஒன்றிற்கு எவ்வளவு.

ரெண்டர் அனுமதிக்கப்பட்டவுடன் பிணைப்பணம் ரூபா 100/ கட்டி ஒப்பந்தம் எழுதிக்கொள்ளவேண்டும். மறுவிபரங்கள் தலைவரிடம் அறிந்துகொள்ளலாம்.

வே. சுவாமிநாதன்,
1-7-66 தலைவர்
638

**அறிவித்தல்**

**நாவற்குழிக் கிராம சபையை இரு கிராமச்சபைகளாகப் பிரித்தல்**

என் 1625 - யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாவற்குழிக் கிராமச்சபைப் பகுதியை இரு கிராமச் சபைகளாகப் பிரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. நைநடி கிராமச்சபை - நைநடி கிராமசேவையாளர் பிரதேசத்தைக் கொண்டது.

2. நாவற்குழி கிராமச்சபை- கோயிலாக்கண்டியினதும் மறவன் புலோவினதும் கிராமசேவையாளர்களின் பிரதேசங்களைக்கொண்டது.

இத்தீர்மானத்தில் அக்கறையுள்ள எவரேனும் அல்லது எக்குழுவினரும் இது சம்பந்தமாக தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்பின், யாழ்ப்பாணம் (வடமாகாணம் மேல்) உள்ளூராட்சி உதவி ஆணையாளருடன் 1966-ம் ஆண்டு ஆடி மாதம் 22-ந் திகதிக்குப் பிந்தாது எழுத்து மூலந் தொடர்பு கொள்ளவும்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர்
3462

## பொதுமக்கள் திண்டாட்டம்!

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னாகம் அரசினர் விறகு காலையில் கடந்த சில வாரங்களாக விறகு விற்பனைக்கில்லாததால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பொது மக்களும், சனசமூக-கிராம முன்னேற்ற சங்கங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி-கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நீர்வேலி.

## சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா 1966

காலம்: — 15, 16-7-66 (வெள்ளி, சனி)

**பின்வரும் போட்டிகள் இடம்பெறும்**

1. பேச்சு, கட்டுரை, சங்கீதம் (பாடசாலை மாணவருக்கு மட்டும்)
2. நாடகப்போட்டி (கூட்டுறவுச்சங்கங்கள் மாத்திரம்)
3. விநோத உடை, கயிறு இழுத்தல்
4, சயிக்கிள் ஓட்டப் போட்டி: பங்குபற்றுவோர் வலிகிழக்கு வாசிகளாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்— பிரவேசம் சதம் 50.

சயிக்கிள் போட்டிக்குரிய விண்ணப்பங்களின் கால எல்லை 14-7-66.

விபரங்களுக்கு செயலாளருடன் தொடர்பு கொள்க.

குழுச் செயலாளர்
வலி-கிழக்கு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
2-7-66 நீர்வேலி. 640

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் படை திரட்டலுக்கு வட வியட்னும் அரசாங்கம் உத்தரவு

## அமெரிக்க விமானங்கள் மாகாண தலைநகரங்களையும் தாக்குவதாக ஹானோய் குற்றச்சாட்டு

### தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

ஹானோய்; ஜூலை 5

வடவியட்னும் தலைநகர் ஹானோய், ஹைபாங் மட்டுமின்றி டாய்ஹூவே, பூடோ, தாய்பின் ஆகிய மாகாணத் தலைநகரங்களையும் அமெரிக்க விமானங்கள் தாக்குவதாயும், பொதுமக்கள் வாழும் பகுதியில் அமெரிக்க குண்டு வீச்சினால் பலர் மாண்டதாயும் சர்வதேச கண்காணிப்புக் கமிஷனிடம் வடவியட்னும் முறையிட்டிருக்கிறது.

அதேசமயம் 18 வயதுமுதல் 30 வயதுவரையான எல்லா இளைஞர்களையும் பொது படை திரட்டலுக்கு அது உத்தரவிட்டிருக்கிறது.

தலைநகர் ஹானோயிலிருந்து பாதுகாப்பு படையினரும், அத்தியாவசிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் தவிர மற்றெல்லா மக்களையும் வெளியேற்றும் திட்டம் அமுல்நடத்தப்பட்டு வருவதாய் நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

விமானத் தாக்குதலுக்கெதிராக நகரில் பாதுகாப்பு நில அறைகள் பல தீவிரமாக அமைக்கப்பட்டு வருகின்றனவாம். தாக்குதலிலிருந்து ஹானோயைப் பாதுகாத்து நிற்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**மீண்டும் தாக்குதல்கள்**

நேற்று அமெரிக்க விமானங்கள் ஒரு நாள் இடைவெளிக்குப்பின், மீண்டும் ஹைபாங் துறைமுகத்தைத் தாக்கின. ஹானோயிலிருந்து 24 கிலோமீட்டர் தூரத்திலுள்ள எரிபொருள் கிடங்குகளையும் தாக்கின. 3 ஏவுகருவிகள் செலுத்தப்பட்ட நிலையில், அவற்றிலிருந்து தப்பி இத்தாக்குதல் அவை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது. வடவியட்னுமுடன் சீனுவை இணைக்கும் முக்கிய பாதை உட்பட, பல இடங்களை அமெரிக்க விமானங்கள் தாக்கின. ஏவுகருவித் தளம் ஒன்றும் தாக்கப்பட்டதாம்.

மாகாணத் தலைநகரங்களில் பல அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்றும், அதுவரை மொத்தம் 1157 விமானங்கள் வீழ்த்தப்பட்டிருப்பதாயும் ஹானோய் செய்தி ஒன்று கூறுகிறது.

**டோக்கியோவில் ஆர்ப்பாட்டம்**

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் நேற்று டோக்கியோ வந்திறங்கிய போது 5000 பேர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஹெலிகோப்டர்களும், துருப்புக்களும் பாதுகாத்து நின்ற நிலையில் பின்வாசல் வழியாக அவர் பத்திரமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

வியட்னும் சமாதானப் பேச்சு இப்போதைய நிலையில் சாத்தியமில்லையென கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் கூறினார்.

தென்வியட்னும் கம்போடிய எல்லைக்குள் ஆக்கிரமிப்பு செய்து வருவதாக ரஷ்யா நேற்று குற்றஞ்சாட்டியது.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற சமாதான சபை அமெரிக்க விமானத் தாக்குதலைக் கண்டித்துள்ளது.

**டிகாலின் தூதர்**

பிரெஞ்சு அதிபர் டிகாலின் விசேஷத்தூதர் ஒருவர் வடவியட்னும் அதிபர் ஹோசிமினுக்கு டிகாலின் சொந்தக் கடிதம் ஒன்றை ஹானோய்க்கு எடுத்துச்செல்வதாக பாரிஸில் அறிவிக்கப்பட்டது.

**பிரிட்டனில்**

பிரிட்டனில் வியட்னும் சம்பந்தமாக பாராளுமன்ற விவாதம் ஒன்று நடத்தப்படவிருக்கிறது. 100-க்கு மேற்பட்ட தொழிற்கட்சி, லிபரல் கட்சி எம்.பி.க்களின் கோரிக்கைக்கிணங்க இது நடைபெறும்.

## இந்தோனேஷிய – மலேசிய வேற்றுமைகள் தளரும்

### பிரி. இந்தோனேஷிய மந்திரிகள் நம்பிக்கை

லண்டன், ஜூலை 5

தற்சமயம் ஜாகர்த்தாவில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது இந்தோனேஷிய மலேஷிய வேற்றுமைகளுக்கு முடிவு காண்பதில் தொடர்ந்து அபிவிருத்தி ஏற்படுமெனப் பிரிட்டிஷ் - இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

தற்சமயம் ஜாகர்த்தாவுக்கு விஜயம்செய்திருக்கும் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. மைக்கல் ஸ்டுவர்ட், இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி திரு. ஆதம் மாலிக்கைச் சந்தித்துப் பேசினார். இரு அமைச்சர்களும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த இருக்கின்றனர்.

1963ம் ஆண்டு பிரிட்டிஷ் சொத்துகள் சுவீகரிக்கப்பட்டமைக்கு முதல்தவணைப் பணமாகக் கடந்த வாரம் இந்தோனேஷியா 120,000 பவுண் செலுத்தியமைக்கு திரு. ஸ்டுவர்ட் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

## பதவி துறக்க தூதர் மறுப்பு

ஹவானு, ஜூலை 5

கியூபாவிலுள்ள இந்தோனேஷியத் தூதர், வெளிநாட்டு மந்திரி திரு. மாலிக்கின் உத்தரவுப்படி பதவியைத் துறக்க மறுத்திருக்கிறார். ஜனாதிபதி சுகர்னோவின் உத்தரவின்றிப் பதவி நீக்கம் செய்யமுடியாதென அவர் கூறுகிறார்.

<u>மைசூர் - மகாராஷ்டிரா</u>

## எல்லைக் கிளர்ச்சி தற்காலிக ஒத்திவைப்பு

பல்கரூர், ஜூலை 5

மைசூர் மாகாராஷ்டிரா எல்லைக் கிளர்ச்சி இன்று முதல் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

கடந்த 24 தினங்களாக இக்கிளர்ச்சி நடைபெற்று வந்தது.

இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி எல்லைப் பிரச்னைபற்றி ஆராய்வதை முன்னிட்டு, கிளர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.

காரியக் கமிட்டி முடிவு மைசூருக்குச் சாதகமாய் இல்லாவிட்டால், கிளர்ச்சி முன்னைவிட வேகமாயும், தீவிரமாயும் ஆரம்பமாகும் என கிளர்ச்சித் தலைவர்கள் அறிவித்தனர்.

நேற்று இக்கிளர்ச்சி சம்பந்தமாக பெல்காமில் 250 பேரும், தார்வாரில் 300 பேரும் கைது செய்யப்பட்டனர்.

## சுப்ரமணியம், அசோக்மேத்தா மீது நம்பிக்கையில்லை

### கட்சிக் கூட்டத்தில் கொண்டுவர சில எம். பி. க்களின் திட்டம்

புனு, ஜூலை 5

பொருளாதாரத் துறையில் குளறுபடி செய்ததாக யூனியன் உணவு மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் மீதும், யூனியன் திட்ட மந்திரி ஸ்ரீ அசோக்மேத்தா மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை பார்லிமெண்டரி காங்கிரஸ்கட்சி கூட்டத்தில் கொண்டுவர சில காங்கிரஸ் எம். பி.க்கள் உத்தேசித்துள்ளதாக நம்பகமாகத் தெரிகிறது.

அமெரிக்கக் கம்பெனியொன்றுடன் ரஸாயன உரத் தொழிற்சாலை பேரம் ஸ்ரீ சுப்பிரமண்யத்தின் தூண்டுதல் என ஊகிக்கப்படுகிறது. இந்தப்பேரம் சோஷலிஸத்துக்கு விரோதமானது. நேரு வகுத்த கோஷ்டி சேரா கொள்கைக்கு இசைவானதாக இது இல்லை என்று பிரஸ்தாப எம். பி.க்கள் கருதுகின்றனராம். சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த போது ஸ்ரீ அசோக்மேத்தா நிகழ்த்திய உரைகள் பொருளாதார சுதந்திர சோஷலிஸக் கொள்கைக்கு முரணானவை என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஸ்ரீ சுப்ரமணியம், ஸ்ரீ அசோக்மேத்தா இருவரின்பேச்சும், செயலும் பொருளாதார அடிமைத்தனத்துக்கும், அதன் விளைவாக அரசியல் அடிமைத்தனத்துக்கும் வழிவகுக்கும் என்று பிரஸ்தாப காங்கிரஸ் எம். பி.க்கள் கருதுகின்றனர்.

நேபா முனை பாதுகாப்பு சம்பந்தமாக ஸ்ரீ கிருஷ்ண மேனன் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர முடியும் என்றால், அதே மாதிரி பிரேரணை ஸ்ரீ சுப்ரமணியம் ஸ்ரீ அசோக்மேத்தா இருவர்மீதும் பொருளாதாரத் துறையில் அவர்கள் செய்த குளறுபடிக்காகக் கொண்டு வர முடியும் என்று அவர்கள் வாதிக்கின்றனர்.

## இந்திய பத்திரிகை சபை

புதுடில்லி, ஜூலை 5

முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதியரசர் திரு. முதோல்கர் தலைமையில் பத்திரிகை சபை ஒன்றை அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் 3 பார்லிமெண்ட் உறுப்பினர்களும், பலதுறைகளைச் சேர்ந்த மற்றும் மூவரும், பத்திரிகைகளைச் சேர்ந்த 19 பேரும் ஆக 25 பேர் இருக்கின்றனர்.

## இந்தோனேஷியா

ஜாகர்த்தா, ஜூலை 5

ஜாகர்த்தாவில் நேற்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து 6 படைப்பிரிவுகள் தயாராக நின்றன.

ஜனாதிபதி சுகர்னோவின் ஆயுட்காலப் பதவியை மக்கள் காங்கிரஸ் பறிக்கவில்லை எனக் கூறி பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதால் மக்கள் காங்கிரஸ் கூட்டம் நேற்று இரு தடவைகள் ஒத்திவைக்கப் பட்டன.

## மகாராணி காருக்கு கல்வீச்சு

டப்ளின், ஜூலை 5

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தின் அயர்லாந்து விஜயத்தில் நேற்று இரு சம்பவங்கள் நடைபெற்றன. போத்தல் ஒன்று அவரது காருக்கு வீசப்பட்டது. பின்பு கொங்கிரீட் கல் ஒன்று வேறொரு இடத்தில் வீசப்பட்டது. இதுசம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

## காய்ந்தாலும், பெய்தாலும் கஷ்டம் கஷ்டமே!

புதுடில்லி, ஜூலை 5

வரட்சியினாலும், உணவுப்பற்றுக்குறையினாலும் பாதிக்கப்பட்டிருந்த இந்தியாவில் இப்போது கடும்மழையும், வெள்ளமும் புதிய சவாலாக விளங்கிவருகின்றன. ஏற்கனவே விளைந்திருந்த பயிர்களையும், பெருவெள்ளம் அழித்துவிட்டது. அஸ்ஸாமிலும் மேற்கு வங்கத்திலும் வெள்ள நிலைமை மோசமடைந்திருக்கிறது.

அஸ்ஸாமில் பிரமபுத்ரா அணை உடைப்பெடுத்திருப்பதால் பெல்காமில் வெள்ளம் பெருகியிருக்கிறது. வெள்ளத்திலிருந்து திப்கேர் நகரைப் பாதுகாக்கும் பாதுகாப்பு அமைப்புக்கள் பல நாசமடைந்துள்ளன. சமீப மழையினால் அஸ்ஸாம் முழுதும் மொத்தம் 26 பேர் மாண்டிருக்கிறார்கள். 1500 கால்நடைகள் பலியாகின.

மேற்கு வங்காளத்தில் 3 நதிகள் கோபாவேசத்துடன் பெருக்கெடுத்திருக்கின்றன. சிக்கிமில் பெருமழை, நிலச்சரிவு காரணமாக 21 பேர் பலியாகியிருக்கிறார்கள் 11 பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. நெல்வயல்களுக்கு ஏற்பட்ட சேதம் பல லட்சக்கணக்காகும். உத்தரபிரதேசத்தில் மழை காரணமாக 13 தொழிலாளர்கள் மாண்டனர்.

சமீபத்தில் வெப்பத்துக்கு நூற்றுக்கணக்கான இந்தியர்கள் பலியானார்கள். வரட்சியினால் ஏற்பட்ட உணவுப் பற்றுக்குறையினாலும் மரணம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. [illegible] உயிர்ப்பலிகள் ஏற்பட்டுள்ளன. வரட்சிக்கு அழியும் பயிர்கள், மழைக்கும்கூட அழிகின்றன. இரண்டும் மனிதனுக்குச் சவாலாக விளங்கும் அதிசயம் இப்போது இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறரது துன்பத்தை நீக்கி கஷ்டநிவாரண உதவி அளிக்கும் அளவுக்கு நாம் கடவுளை அணுகுகின்றோம். இதற்குக் கல்வி அறிவு தேவையில்லை. கல்வி, செல்வம், பதவி முதலிய பெருமைகளை அறவேவிட்டு, நாம் செய்யும் தொண்டுகளை கடவுள் ஏற்று அருள் செய்கின்றார்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆனி மீ 22 உ (6 7-66)

## திருக்கோணமலை

திருக்கோணமலையின் எதிர்காலம்பற்றி மூன்று குழுக்கள் அறிக்கை தயாரித்து வருகின்றன. திருக்கோணமலைத் துறைமுகத்தையும் அதன் சுற்றுடலையும் அபிவிருத்திசெய்வது சம்பந்தமாக பரிசீலனைசெய்த மந்திரி சபையின் திட்டக்கமிட்டி உபகுழு பல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. இதில் முக்கியமானது திருமலைத் துறைமுகத்தை தீர்வையற்ற துறைமுகமாக்கவேண்டுமென்பதாகும். சிலதினங்களுக்கு முன் திருமலைக்கு விஜயஞ்செய்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவும் திருமலைத் துறைமுகம் தீர்வையற்ற துறைமுகமாக இருக்கவேண்டியது அவசியமெனத் தெரிவித்துள்ளார். திருமலையின் எதிர்காலம்பற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சரும் கைத்தொழில் கடற்றொழில் உதவி மந்திரியும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இயற்கைத் துறைமுகத்தையுடைய திருக்கோணமலை இலங்கையின் கேந்திரஸ்தானங்களில் ஒன்று. சரித்திரகாலந் தொட்டு சர்வதேசப் பெருமைவாய்ந்த நகரம் அது. அதைச் சரியாக விருத்தி செய்து பயன்படுத்தினால் நாட்டின் பொருளாதாரம் வெகுவாக விருத்தியடைய முடியும். இதற்கு முன் ஆட்சி பீடத்திலிருந்த அரசாங்கங்கள் அரசியல் நோக்கத்துடனும் வகுப்புவாதக் கண்ணோட்டத்துடனும் காரியங்கள் செய்ததால் திருமலையை அபிவிருத்தி செய்யவோ அதைப் பயன்படுத்தவோ தவறிவிட்டன. இன்று தேசிய அரசாங்கம் ஆட்சியிலமர்ந்து தேசிய ஒற்றுமையை உருவாக்கியுள்ளது. திருமலையில் வர்த்தகப் பிரமுகர் ஏ. எஸ். எம். ஜெகநாதன் நிறுவியுள்ள கண்ணாடித்தொழிற்சாலையைத் திறந்துவைத்த அமைச்சர் திருச்செல்வம், நிலைமை மாறிவருகிறதென்றும் மக்கள் தொழில் மனப்பான்மை கொள்ளவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். திருமலைத் துறைமுகம் தீர்வையற்ற துறைமுகமாக்கப்பட்டால் ஏற்றுமதி இறக்குமதியும் அதிகரிக்கும். நாட்டின் வருமானம் பெருகும். புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கும், தொழில்விருத்தி பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இந்திய அரசாங்கத்தின் சேதுசமுத்திரத் திட்டத்தினால் கொழும்புத் துறைமுகம்பாதிக்கப்பட நேரிடுமென்பது உண்மை. இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய இரண்டு வழிகள் உண்டு. முதலாவது காங்கேசன் துறை துறைமுகத்தை விருத்திசெய்வது; மற்றது திருமலையை விருத்தி செய்வதுடன் திருமலைத் துறைமுகத்தை தீர்வையற்ற துறைமுகமாக்குவது. காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கும் அதேசமயம்திருமலையையும் விருத்தி செய்யவேண்டும். திருமலையின்விருத்தி திருமலை மக்களுக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் மட்டுமல்லாது நாட்டின்பொருளாதாரக் கஷ்டத்தையே நீக்கிவிடுமென்பது திண்ணம். எனவே திருகோணமலை அபிவிருத்தியில் தேசிய அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தும் என எதிர்பார்ப்போம்.

## வியட்நாம் நிலை

வியட்நாமில் நிலைமை மோசமடைந்து வருகிறது. நிலைமையை சமாளிக்க பலரும் பலவித முயற்சிகள் செய்தும் இதுவரை உரியபலன் கிடைக்கவில்லை. இப்பொழுது இந்த முயற்சியில் பிரஞ்சு அதிபர் டிகோலும் ஈடுபட்டுள்ளார். ஜெனரல் டிகோலின் பிரதிநிதி ஒருவர் வடவியட்நாம் அதிபர் ஹோ-சி-மின்னை சந்திக்கச்சென்றிருக்கிறார்.

வடக்கு வியட்நாம் முன்பு பிரான்சின் ஆதிக்கக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இன்று அமெரிக்காவின் நோக்கத்தையும் செயலையும் வடக்கு வியட்நாம் எதிர்க்கிறது, அமெரிக்காவின் நடவடிக்கைகள் பிரான்சுக்கும் பிடிக்கவில்லை. பிரான்சுக்கு மட்டுமல்ல வியட்நாமில் அமெரிக்கா தொடர்ந்து கண்மூடித்தனமாகக் குண்டு வீசுவதை உலக சமாதானத்தை விரும்பும் எவரும் விரும்பவில்லை அமெரிக்காவுக்கும் கூட இது விருப்பமாக இருக்கமுடியாது ஆழந்தெரியாமல் காலைவிட்டபின் அது கௌரவமாக வெளியேறத் துடிக்கிறது. வியட்நாமிலும் சரி வேறு எந்த இடத்திலும் சரி அந்நியத் துருப்புக்கள் இருக்கும்வரை பிரச்னை இருந்தே வரும்.

ஐ. நா.வில் சீனாவுக்கு அங்கத்துவமளிக்கப்பட்டிருந்தால் வியட்நாம் பிரச்னை இவ்வளவு மோசமான நிலையை அடைந்திருக்காது எனினும் இப்பொழுது பிரான்ஸ் இவ் விஷயத்தில் தலையிடுவது நல்ல முடிவுக்கு வழிகாட்டக்கூடும். பிரான்ஸ் சீனா மற்றும் நாடுகள் பல இந்தோ-சீனாவுக்கான 1954-ம் வருட ஜெனிவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தநாடுகள் மீண்டும் கூடி ஒரு நல்ல முடிவைக் காணலாம். எதுவானாலும் பிரஞ்சு அதிபர் டிகோல் எடுக்கும் முயற்சி அமெரிக்கா, வியட்நாமிலிருந்து கௌரவமாக வெளியேறவும் வியட்நாம் நிலைமை மோசமாகி உலக அமைதிக்குக்கேடு செய்யாமலும் காப்பாற்றக்கூடியதாக அமைய வேண்டுமென்பதே அமைதியை விரும்பும் மக்களின் ஆவல்.

# இன்றைய யூகோஸ்லேவியா

25 ஆண்டுகட்கு முன்னர், 1941ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதியன்று மார்ஷல் டிட்டோவின் தலைமையில்கூடிய யூகோஸ்லேவிய கம்யூனிஸ்ட் கட்சி, ஹிட்லரின் பாசிச ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடுவதென்ற தீர்மானத்தை எடுத்தது. ஹிட்லரின் பாசிச ஆட்சியை வெறுத்த யூகோஸ்லேவிய மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்றுத் தமது உண்மையான சுதந்திரத்திற்காகப் போராட முன்வந்தனர். இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னர், 1943ல், யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுதே, ஒரு குடியரசை அமைப்பது என்ற தீர்மானத்தை மக்களின் பிரதிநிதிகள் போர்முனையிலேயே எடுத்தனர். 194 ல் இரண்டாவது உலகயுத்தம் முற்றுப்பெற்றதும், தம் நாட்டைச் சோஷலிஸ அடிப்படையிலே அமைப்பதென்ற உறுதியான தீர்மானத்திற்கமைய மிகப் பெரும் பொறுப்பினை ஏற்றனர்.

பாசிச ஆட்சியை எதிர்த்துப் போராட முன்வந்த மக்களுள் யூகோஸ்லேவிய மக்களே இறுதிவரை போராடித் தமது சுதந்திரத்தை நிலைநாட்டினர். யூகோ. மக்கள் தாம் உண்மையான சுதந்திர புருஷர்களாக வாழ்வதாயின், பொருளாதார அடிப்படையிலே தம் நாட்டினைக் கட்டி வளர்க்க வேண்டும் என உணர்ந்தனர். இன்று, இருபத்தொரு ஆண்டுகட்குப் பின்னர், பின்தங்கியபொருளாதார நாடாக இருந்த நிலை மாறி நன்கு வளர்ச்சியடைந்த தொழிற்சாலைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடாகத் திகழ்கின்றது.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னர், யூகோஸ்லேவியா ஒரு விவசாய நாடாக விளங்கியது. உணவுப்பொருள்கள் அங்கு உற்பத்தியாகிய பொழுதும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. யூகோஸ்லேவியாவில் இருக்கக்கூடிய மூலப்பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவே தவிர அவற்றை ஆதாரமாகக் கொண்ட தொழிற்சாலைகள் அமைக்கப்படாதிருந்தது. இக்காரணத்தினால், ஏறக்குறைய 75வீதம் மக்கள் விவசாயத் தொழிலை நம்பி வாழ்பவராகவே இருந்தனர். அவர்களது வாழ்க்கைத்தரம் மிகவும் குறைவாகவே இருந்தது. இத்தகைய பின்தங்கிய யூகோஸ்லேவியா இன்று யந்திரத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட ஒரு நாடாக விளங்குகின்றது. அங்கு கடந்த 21 வருடங்களுள் தொழிற்சாலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டதன் காரணமாக இன்று 40 வீத மக்களே விவசாயத் தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் பொழுது, இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டால், இன்றைய யூகோஸ்லேவியாவின் பொருளுற்பத்தி 8 மடங்காக அதிகரித்துள்ளது. இவ்வாறு உற்பத்தி அதிகரிப்பதற்குத் தொழிற்சாலையின் வளர்ச்சியே காரணமாகும். இக்காரணத்தினாலேயே, யூகோஸ்லேவியா ஒரு யந்திரத் தொழில்வளம் நிறைந்த நாடாக ஐ. நா. கருதுகின்றது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர், யூகோஸ்லேவியாவின் மின்சார உற்பத்தி நான்கு மடங்காக அதிகரித்ததுடன் மின்சார இயந்திரங்களும் இன்று தயாரிக்கப்படுகின்றன. இலங்கை, எகிப்து போன்ற பின்தங்கிய நாடுகளில் மின்சாரத் திட்டத்தைக் கட்டியமைக்கும் பொறுப்பினை ஏற்கக்கூடிய அளவிற்கு அவர்கள் முன்னேறியுள்ளனர். தற்பொழுது மஸ்கெலியாத் திட்டத்தை யூகோஸ்லேவிய எஞ்ஜினியர்மார் கட்டுவதுடன் அதில் உபயோகிக்கப்படும் இயந்திரங்களும் யூகோஸ்லேவியாவிலேயே செய்யப்பட்டவையாகும். இத்துடன், நம் நாட்டில் தற்பொழுது உபயோகிக்கப்படும் 5 மீன்பிடி இயந்திரப் படகுகளும் யூகோஸ்லேவியாவிலே செய்யப்பட்டவையாகும்.

யூகோஸ்லேவியாவில் யந்திரத் தொழில் வளம் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியடைந்ததுடன், அவற்றின் நிர்வாகமும் தொழிலாளர்வசமே உண்டு.

யூகோஸ்லேவியாவில் தொழிற்சாலைத் தொழில் வளர்ச்சியடைந்தாலும் விவசாய அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் அதிக அபிவிருத்தி ஏற்படவில்லை விவசாய நிலங்கள் இன்னும் சமுதாயச் சொத்தாக ஆக்கப்படவில்லை. ஒவ்வொரு விவசாயியும் 10 ஹெக்ரார் (15 ஏக்கர் நிலம்) தனிச் சொத்தாக வைத்திருக்கலாம். இதன் காரணமாக யூகோஸ்லேவிய விவசாயிகள் புதிய விஞ்ஞான முறையைக் கையாள முடியாத நிலையில் வாழ்கின்றனர்.

யூகோஸ்லேவியாவின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்கதொன்றாகும். சோஷலிசத்தை எல்லையாகக் கொண்டு உலக அரங்கில் நடுநிலைமை வகிக்கும் நாடாக விளங்குவதுடன் நடுநிலை நாடுகளின் தலைமையும் யூகோஸ்லேவியாவிற்கே சாரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

— அ. விசுவநாதன்

## தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்க திட்டம்

கொழும்பு, செவ்

நாட்டின் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக அரசாங்கம் பல உற்சாகமூட்டும் திட்டங்களைக் கொண்டுவரவிருக்கிறது. தேயிலைத் தோட்டங்களுக்கு குறைந்த அளவு வட்டியில் கடனுதவி அளிப்பது அரசாங்கத்தின் புதிய திட்டங்களில் ஒன்றாகும்.

புதிய திட்டத்தின்படி தேயிலை இயந்திரங்கள் வாங்கவும் புதிய தொழிற்சாலைகள் நிறுவவும் அடுத்த ஐந்து வருடங்களில் மூன்று கோடி ரூபா. செலவிடப்படுமென்றும் இதன் மூலம்வருடந்தோறும்இரண்டரை கோடி ரூபா வெளிச் செலாவணி சம்பாதிக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

தேயிலைத் தோட்டங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக்கொடுக்கவும், புதிய இயந்திரங்கள் வாங்கவும் தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவவும் கடன் வசதியளிக்கப்படும்.

# ஐயாறன் எழுதுகிறது

பூமிதானம், சிரமதானம், அன்னதானம்- இம்மூன்று தானங்களும் இரத்மலானையிலே சிறப்பாக நடந்துள்ளதை அறியப் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

அகில இலங்கை காந்தி சேவாசங்கத்துக்கு கொழும்பிலே ஒரு சர்வோதய ஆசிரமம் அமைக்க ஓரிடம் தேவையாக இருந்தது. கொழும்பிலே பணம் கொடுத்து இடம் வாங்க ஓர் எளிய ஸ்தாபனத்தால் நினைக்கவும் முடியுமா? ஆனால் திருவருள் கூட்ட, கொழும்பு இந்துக்கல்விச் சபையினர் இரத்மலானையில் தங்களுக்குச் சொந்தமான காணியில் சுமார் ஓர் ஏக்கரை இச்சபையினருக்கு பூமிதானமாகக் கொடுத்தது ஒரு மேலான முன்மாதிரியாகும்.

இந்த இடம் கிடைத்ததும் சென்ற கிழமை சுமார் 175 வாலிபர்கள் அந்த இடத்துக்குச் சென்று, அங்குள்ள செடிகொடிகளை அகற்றிச் சிரமதானமுறையில் துப்புரவுசெய்தார்களாம். பலே பலே! இந்தச் சிரமதான வேலை மாதாமாதம் ஒருநாள் நடைபெறுமென்றும் அந்த இடத்தை மட்டமாக்கிச் சீர்செய்து, வேலியும் அடைக்கவிருப்பதாயும் தெரிகிறது. அடுத்த மாதம் சர்வோதயத் தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயணன், அங்கு வந்து சர்வோதய ஆசிரமத்துக்கு அடிக்கல் நாட்ட இருக்கின்றார். எதிர்பாராதவிதமாக இந்தத் திருப்பணி வேலைகள் ஜரூராக நடைபெறுகின்றன.

ஃ ஃ ஃ

சிரமதான வேலை செய்தவர்களுக்கு அன்று அன்னம் அளிக்கவேண்டும் அல்லவா? உணவை விலைக்கா வாங்குவது? உடன் இரத்மலானை இந்துக்கல்லூரி மாணவர் விடுதியின் அதிபர், அன்று சிரமதானம் செய்தவர்களுக்கெல்லாம் அன்னதானம்செய்ய முன்வந்தாராம். புண்ணியத்துக்கு மேல் புண்ணியம் சேருகின்றது.

அத்துடன் நிற்கவில்லை. ஆசிரமம் ஆரம்பிக்கு முன்பாகவே, இரு கிஸான் ராட்டைகளை ஓரன்பர் தானமாகக் கொடுத்தாராம். கைராட்டைகள் சுற்றி, நூல் நூற்க ஆரம்பித்துவிட்டது. இதைக் கண்டார் வித்யாலங்கார பேராசிரியரான பௌத்த பிக்கு சாந்தஜோதி. இந்தக் கைராட்டை தான், இலங்கை மக்களின் மானத்தைக் காக்கக்கூடியதென்று பகிரங்கமாகக்கூறி பாராட்டினாராம். சர்வோதய நெறிமுறையே சிங்களவருக்கும், தமிழருக்கும் நல்லுறவை வளர்க்கப்போவதாக அவர் நம்பிக்கையும் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

சிங்களவரிடையே சிரமதான இயக்கம் பரவிவருகின்றது. ஆனால் மகாத்மா கூறிய கதர் கைராட்டையைப் பற்றி அவர்களுக்கு அநேகமாக ஒன்றும் தெரியாது. பெரிய பண்டாரநாயக்கா வாலிபராக இருக்கையில், மகாத்மா காட்டிய வழியில் சர்க்கா (கைராட்டை) சங்கம் அமைத்து கதர் உற்பத்திசெய்து கதரையேகட்டியும்வந்தாராம். ஆனால் சிறிது காலத்தில் துரதிருஷ்டவசமாகக் கைவிட்டுவிட்டார். இலங்கையில் கதர் உற்பத்தி, இந்தக் கொழும்பு ஆசிரமம் மூலம் பெருகுமாயின் அது

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போதுள்ள கல்வி முறை இலங்கைக்கு சிறிதும் பொருத்தமற்றது!

## வேலையில்லாத்திண்டாட்டத்துக்கு கல்விக் கொள்கை காரணமாகும்

### உதவி ஆசிரியர்கள் கூட்டத்தில் எம். பி.

கண்டி, செவ். நாட்டில் இப்பொழுது அமுலில் இருக்கும் கல்வி முறை, இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாக இருக்கிறது. முன்னேற்றமடையக்கூடிய நாடொன்றுக்குக் கல்வி முறை சிறிதும் பொருத்தமற்றது. இக்கல்வி முறையினால் நாட்டின் முன்னேற்றம் நிச்சயமாகபாதித்திருக்கிறது'' என்று கட்டுக்கெலகாந்தி கல்லூரியில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண சிங்கள உதவிஆசிரியர்கள் கூட்டத்தில்வத்தேகம எம். பி. திரு பி பி ஏ. வீரக்கோன் பேசுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த வண. எம். விமலபோதிதேரோ தலைமை வகித்தார்.

#### தன்னிறைவு

''நாட்டைப் பலநெருக்கடிகள் எதிர்நோக்கியிருந்த போதிலும், குறைந்தது அத்தியாவசியமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதிலாவது நாடு தன்னிறைவு பெறவேண்டியது மிகவும் அவசியமாகும். விவசாயத்துறையில் ஈடுபடுபவர்களின் தொகை குறைந்துவருவது, நாட்டில்வேலையில்லாத் திண்டாட்டம் நீடித்துவருவதற்குரிய தொரு காரணமாகும். அபிவிருத்தி வேலைகளுக்கு விஞ்ஞான தொழில்நுட்ப நிபுணர்கள் இங்கு குறைவாகஇருப்பதும் நாட்டின் முன்னேற்றத் தடைக்குரிய காரணம்'' என்றும் அவர் கூறினார்.

#### அடிப்படைக்காரணம்

''இதெல்லாவற்றுக்கும் அடிப்படைக்காரணம்என்னவென்று உற்றுநோக்கினால், நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்டிருக்கும் தவறுகள் தான் என்பது ஓரளவு புரியும். இப்பொழுதுள்ளகல்வி முறை, இலங்கையின்தேவையைப் பூர்த்திசெய்ய முடியாது. கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு விவசாயம், தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இதன்மூலம் மட்டுமே வரும் காலத்திலாவது நாட்டை உற்பத்தித்துறையில் முன்னேற்றமுடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்க முடியும்'' என்று அவர் கூறினார்.

''டாக்டர் டபிள்யு தஹநாயக்கா கல்வி மந்திரியாக இருந்தகாலத்தில் கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் விஞ்ஞானம் போதிப்பதற்கு ஓரளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததை மறக்கமுடியாது'' என்றும் திரு பி பி ஏ வீரக்கோன் தெரிவித்தார்.

#### உதவி ஆசிரியர்கள்

உதவி ஆசிரியர்களுக்குஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், சுமார் ஒன்றரைவருடகாலத்துக்குமுன்னர் அவர்கள் உதவு ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டபோதிலும் இதுவரை அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லையென்றும் ஆனால்புதிய கல்வுக்கொள்கைகள் அமுல் செய்யப்படும்பொழுது அவர்களின் கஷ்டங்கள் நீங்கிடுமென்றும்தெரிவுத்தார்.

''டட்லி சேனநாயக்கா மீண்டும் ஆட்சிக்குவந்தபின் இந்த நாட்டில் இப்பொழுது இன ஒற்றுமை நிலவுகிறது இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பூரண சுதந்திரமும் உரிமையும் பெற்றுள்ளான்.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவண விமலபோதி தேரோ பேசுகையில், இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதற்கு போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இக்கூட்டத்துக்கு சமூகமளித்திருக்கும் உதவி ஆசிரியர்கள் உள்ளிட்டு பலருக்கும் இப்பொழுதுதான் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

---

## ''கசிப்பு ஒழிக்கப்படவேண்டும்!''

### திறப்பு விழாவில் கிளிநொச்சி எம். பி.

பரந்தன், செவ்வாய் 'இப்பகுதி முன்னேற வேண்டுமானால் கசிப்பு ஒழிக்கப்படவேண்டும்' என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தரம் உயர்த்தப்பட்ட தர்மபுரம் உபதபால் கந்தோரை திறந்துவைத்துப் பேசுகையில் சொன்னார். திரு. க. இராமச்சந்திரன் தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கஷ்டப்பட்டு கூலிவேலை செய்து உழைத்து அன்றுட வாழ்வை போக்குகிறீர்கள். அப்படியிருக்க, கள்ளத்தனமாக இப்பகுதியில் வடிக்கும் கசிப்பைக் குடித்து உழைக்கும் பணத்தை ஊதாரித்தனமாகச் சிலர் செலவு செய்கிறார்கள். கடைசியில் பொலிஸிலும் போய் நின்றுகொள்கிறார்கள். தேகசுகத்தையும் கெடுத்துக்கொள்கிறார்கள் இப்பகுதி முன்னேற வேண்டுமானால் கசிப்பு ஒழிக்கப்படவேண்டும்.

இப்பகுதியில் வசிக்கும் நீங்கள் அதிர்ஷ்டம் குறைந்தவர்களாக இருக்கின்றீர்கள். 1958ல் இனக்கலவரத்தின்போது இங்கு குடியேற்றப்பட்டீர்கள். சந்தர்ப்பவசத்தால் இடைக்காலத்தில் நாடற்றவர்களாகிவிட்டீர்கள். எனினும் யான் உங்கள் தேவைகளைக் கவனிக்கத் தவறவில்லை. உங்களுக்குக் காணி கொடுப்பதற்கு ஆவன செய்துவருகின்றேன்.

நாங்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதால் எங்கள் தேவைகளைக் கவனிப்பதில்லை என குறைக் கூறிவருகின்றீர்கள். நூற்றைம்பது பேர் தங்கக்கூடிய தடுப்பு முகாம் விடுதியில் நானூறு பேர்களைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தில் அடைத்து வைத்திருப்பதனை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி ஆவன செய்யும்படி கேட்டிருக்கிறேன்.

இவ்விழாவில் மாதர் முன்னேற்றச்சங்கத் தலைவி ஸ்ரீமதி சிவபாக்கியம், கிராம முன்னேற்றசங்கத் தலைவர் திரு. தங்கராசா, கிராம சபை அங்கத்தவர் திரு. சோமசுந்தரம், கிராம சேவையாளர் திரு. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

---

## ஏகாதிபத்திய நாடுகளின் அனுதாபம்

### நம் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கிறது என்கிறார் விக்கிரமசிங்கா

பம்பலப்பிட்டி, செவ் ''பொருளாதாரச் சுதந்திரத்தில்தான் ஒரு நாட்டின் தேசிய விடுதலை தங்கியிருக்கிறது. ஆனால் இலங்கையின் தலைவிதியை ஏகாதிபத்திய நாடுகளின் அனுதாபம்தான் தீர்மானிக்கிறது''

கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற 22-வது வருடாந்த கம்யூனிஸ்ட்மகாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. எஸ் ஏ விக்கிரமசிங்கா பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

டாக்டர் விக்கிரமசிங்கா மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

கம்யூனிஸ்ட் சித்தாந்தத்துக்கிணங்க அரசாட்சிநடத்தும் நாட்டில்தான் பொருளாதார முன்னேற்றமும், நல்லாட்சியும் உண்டென்பது கண்கூடு. 1958-ம் ஆண்டுக்குப் பிறகுதான் நம் நாடு கைத்தொழில் வளர்ச்சியில் ஓரளவு முன்னேற்றம் கண்டது. இது சோஷலிச நாடுகளின் உதவியால்தான்என்பதையாராலும் மறுக்க முடியாது. மேற்கத்திய நாடுகளினால் அல்ல என்பதையும் நாடறியும்.

தேசிய அரசாங்கம் நம்மை அடிமைகளாக்க முயல்கிறதென்றும், அமெரிக்காவையே எந்நேரமும் உதவிக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதென்றும் திரு விக்கிரமசிங்கா குற்றம் சாட்டினார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு பீட்டர் கெனமன் பேசுகையில் தமது கட்சி உழைப்பாளிவர்க்கத்தின் நலன்களுக்காக போராடும் இயக்கமென்றும், அவர்களுக்கு முடியுமான அளவு சேவையை கட்சி செய்திருக்கிறதென்றும் சொன்னார்.

அவர் மேலும்பேசுகையில் சொன்னதாவது:-

ஜனநாயகத்தின் விரோதிகள் தான் கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் என்று ஐ. தே. கட்சியினர்பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எவருமே எமது கட்சியில் இல்லை. நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு வழிவகுத்து விட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் சங்க நாதம் செய்கின்றனர். தமது கட்சிக்குள் இருக்கும் பிளவையே சரி செய்ய முடியாமல் திண்டாடும் இவர்கள் இப்படியாக கூச்சலிடுவது வெட்கக்கேடு.

திருமதி விவியன் குணவர்த்தன, செனட்டர ஐ. கரணகொட உட்பட வேறுபலரும் பேசினர்.

---

## பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல்செய்ய சந்தர்ப்பம்

கொழும்பு, செவ்வாய் மங்களஎலிய என்ற இடத்தில் விமலாவதி என்ற பெண் கொலைசெய்யப்பட்டு கிடந்தது சம்பந்தமான வழக்கில் குற்றவாளியெனக் கண்டுபிடிக்கப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பொடி அப்புகாமி என்பவரின் வழக்கறிஞர்கள் கவர்னர்ஜெனரலிடம் சமர்ப்பித்துள்ள வேண்டுகோளின் காரணமாக பொடி அப்புகாமியைத் தூக்கிலிடுவதை கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லவா ஒத்திவைத்துள்ளார். பொடி அப்புகாமி தமக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை எதிர்த்துபிரிவுகவுன்சிலுக்கு மனுசெய்ய அனுமதிக்கும் நோக்கத்துடனேயே கவர்னர்ஜெனரல் தூக்குத்தண்டனையை ஒத்திவைத்தார்.

தூக்குத்தண்டனைக்கான திகதிநிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. பிரிவுகவுன்சில் அப்பீல் அனுமதிக்கப்படுமானால் மீண்டும் ஒத்திவைக்கப்படும். தற்பொழுது பொடி அப்புகாமி வெலிகடை சிறையில் ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ளார்,

---

## திரு. தில்லைநாத புலவர் காலமானர்

யாழ்ப்பாணம், புதன் சரவணையூர் திரு. ஆறுமுகம் தில்லைநாத புலவர் நேற்று காலமானர். அவருக்கு வயது 84 சைவத்துக்கும் தமிழுக்கும் மேலான சேவைசெய்த அவருக்கு வேலணையிலே பொன்னடை போர்த்திக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல முன்மாதிரியாக அமைந்து நாடெங்கும், கதர் உற்பத்தி பெருகச் செய்யலாம். அம்பர் ராட்டைகளையும் வரவழைக்க வேண்டிய முயற்சி நடப்பதாகவும் அறிகிறேன். நமக்கு வேண்டிய துணிகளை நாமே உற்பத்திசெய்து கொள்ளமுடியுமானால் அது எவ்வளவு நல்லது. கொழும்பு ஆசிரமம் இந்த மேலான தேசிய கைங்கரியத்தை அரசாங்க ஆதரவுடன் சிறப்பாகச் செய்யும் என்பதே நம்பிக்கை.

அன்று சிரமதானத்திலே முன்னாள் தொழிற்கமிஷனர் ராஜநாயகம் தாமாக வந்து கலந்துகொண்டு, மண்வெட்டி பிடித்து வேலைசெய்தாராம். மேலும் அந்த இடத்துக்கு ஒரு ரஸ்தா போட்டுத்தரவும் வாக்களித்ததாகத் தெரிகிறது.

''சர்வோதய பாத்திர''ங்களை (பிடி அரிசிக் கலயம்) கொழும்பில் சில வீடுகளில் வைத்து அரிசி வசூலிப்பதாயும், அதைக்கொண்டு, சிரமதான வீரர்களுக்கு அன்னதானம் அளிக்கவும் உத்தேசித்துள்ளதாகவும் அறிகிறேன். இந்த நல்ல இயக்கத்துக்குப் பொதுமக்கள் பூரண உதவியளித்து வளர்ப்பது, ஊருக்கும், நாட்டுக்கும் செய்துகொள்ளும் மேலான உதவியாகும்.

ஃ ஃ ஃ

தொடரும் தொண்டரைத் துக்கத் தொடர்ந்து
வந்து, அடரும்போது அரனருள் செய்பவர், கடலின் நஞ்சணிகண்டர் கடி
புனல் சடைப் பாலைத்துறையரே.
— அப்பர் சுவாமிகள்.

---

## பெரியவிளான் படுகொலை

யாழ்ப்பாணம், செவ். அளவெட்டி வடக்கைச் சேர்ந்த முன்னாள் கால்ஸ்டபிள் சுப்பிரமணியம் சிவகுருநாதனை பெரியவிளானுக்கு கடத்திச்சென்று கொலை செய்ததாக சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்ட எஸ். கந்தசாமி, செ. பூமணி, எஸ். மாணிக்கம், எம், லூர்த்தம்மா ஆகிய நால்வரையும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. நெத்தசிங்க முன்னிலையில் சங்கானை பொலீஸார் ஆஜர்செய்தனர்.

சந்தேக நபர்களைப் பார்ப்பதற்காக மல்லாகம் கோர்ட்டில் மக்கள் நிறைந்திருந்தனர், சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. மெண்டிஸ் கோர்ட்டில் தெரிவக்கையில் தாம் விசாரணைநடத்தியபொழுது அங்கு மூன்று கயிற்றுத் துண்டுகளும், இரண்டு இரத்தம்படிந்த சாக்குகளும் இருந்து எடுத்ததாகவும் அவற்றை அரசாங்க பரிசோதனைக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான திரு. ரி. கணேசலிங்கம் இரண்டாவது சந்தேக நபரின் 5 மாத பச்சிளம் குழந்தையையும் 4-வது சந்தேகநபரின் 11 மாதக் குழந்தையையும் தாய்மார்களுடன் விளக்கமறியலுக்கு அனுப்பிவைக்கும்படி கோரினார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு குழந்தைகளும் விளக்கமறியலுக்குகொண்டு செல்லப்பட்ட பரிதாபகரமான காட்சி அங்குகூடி நின்ற மக்களை நெஞ்சுருக வைத்தது.

சந்தேக நபர்கள் சார்பில் திரு,ரி. கணேசலிங்கம், ஜே. ஆர். செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். சந்தேக நபர்களை 11-ம் தேதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

(ந. நி.)

---

## பீட்டர் கெனமன் யாழ்ப்பாணம் வருவார்

யாழ்ப்பாணம், புதன் சுன்னாகத்தில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு திரு பீட்டர் கெனமன் 9-ந் திகதி காலை விமானமூலம் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ந. நி.

## விமான என்ஜின்கள்

லண்டன், ஜூலை 5 இந்தோனேஷியாவுக்கு விமான என்ஜின்களை ஏற்றுமதிசெய்யப் பிரிட்டன் அனுமதி வழங்கியிருக்கின்றது.

# சிவாஜி நடிப்பை அப்படியே காப்பிபண்ணச் சொல்கிறார்களே!

## சிங்கள நடிகர் சீற்றம்



"சிவாஜி கணேசன் வேண்டுமானால் சிறந்த நடிகராக இருக்கலாம்! அதற்காக என் முகத்திலும் தாடியையும் மீசையையும் ஒட்டி, அவர் நடித்த பழைய படங்களைப் பார்க்கவைத்து, அப்படியே அவர் நடிப்பைக் காப்பிபண்ணச் சொல்கிறார்களே இவர்கள்......? ஒரு 'டுப்பிளிக்கேற் கணேச'னாக மாறத்தானா இவ்வளவு பாடுபடுகிறேன் நான்......! சே...... சே...... அலுத்துவிட்டது!'' என்று இப்படி உஷ்ணப் பெருமூச்சுகளை விட்டது யாரென்று நினைக்கிறீர்களா?

ஒரு சாதாரண திரைப்பட உதவியாளராக நுழைந்து, எம். ஜி. ஆரின் முகச்சாடையையும், ஜெமினியின் கட்டுடலையும், சிவாஜியின் நடிப்பையும் ஒருங்கே கொண்டவராய் சிங்களச் சினிமாவில் தனக்கு நிகர் தானேஎன்பதுபோல மின்னி முழங்கி வரும் காமினி பொன்சேகா தான் அவர்!

இவர் ஸ்ரீதரின் அமரதீபத்தின் 'காபன்' காப்பியான 'யட்டகிய தவஸ' என்ற படத்தில் நடித்தது சம்பந்தமாகவும், அதில் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாகவும் மேற்கண்ட தனது கருத்துக்களை துணிச்சலாகச் சொன்னார்!

''என்றைக்குத் தயாரிப்பாளர்கள் சிவாஜி நடிப்பை விட்டு தூர ஒதுங்கச் சொல்வார்களோ அன்றைக்குத் தான் நான் முழு நடிகன்!'' என்கிறார் நடிகர் காமினி பொன்சேகா.

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

கன், கௌரவ நடிகராக வந்திருந்தாலும்திறமையாக நடித்துள்ளார். ஜோடியாக வரும் நாகேஷ், மனோரமாவுடன் சேர்ந்து நம்மைச் சிரிக்கவைக்கிறார். தெருக்கூத்தில், காலஞ்சென்ற கலைவாணர், பெண் வேடத்தில் தோன்றும் தங்கவேலுவுடன் சில நிமிடங்கள் நடித்துள்ளார்.

திரைக்கதை வசனத்தில் கலைஞர் கருணாநிதியைக் காணவில்லை. கருணாநிதி படத்தில் நேரில் தோன்றுவதற்கு அதுதான் காரணமோ? பாடல்கள் கண்ணதாசனல்லவென்பது தெரிகிறது. நீலகண்டன் டைரக்ஷனில் தயாரான இப்படம் முரசொலி மாறனின் சொந்தப்படம். வசனங்களில் இடையிடையே அரசியல் வாடை வீசுகிறது தற்பொழுது யாழ்ப்பாணம் வின்ஸரில் திரையிடப்பட்டுள்ளது. குடும்பத்துடன் பார்க்கக்கூடிய படம்.




## 'சரோ' நீ ஒரு அதிர்ஷ்டசாலி!

தமிழ்ப் படவுலகில் நிரந்தரக் கதாநாயகியாகிவிட்ட கன்னடத்துப் பைங்கிளி சரோஜாவுக்கு முன்னர் சினிமா என்றால் பிடிக்காதாம்! நடிகையாக வேண்டும் என்று கூட அவர் கனவிலும் நினைக்கவில்லையாம்! அப்படிப்பட்ட 'சரோ' இன்று பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் கனவுலகக் கன்னியாக கும்மாளம் அடிக்கிறார்! உண்மையில் 'சரோ' ஒரு அதிர்ஷ்டசாலி! இல்லாவிடா? டால் அவர் படவுலகில் நாயகி ஆகியிருக்க முடியுமா? எம். ஜி. ஆருடன் பல படங்களில் ஜோடி சேர்ந்து ஆடிப்பாடி துள்ளிவிளையாடியிருக்கத்தான் முடியுமா?

# நடிப்புக்குப் பொருத்தமானவர்!

## இலட்சியநடிகர் எஸ்.எஸ். ஆருக்கு அண்ணாதுரை புகழ்மாலை!!



நடிப்புக்குப் பொருத்தமான அத்தனை அங்கு லட்சணங்களையும் பெற்றவர் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். என தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரை சென்னையில் எஸ். எஸ். ஆருக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கூட்டமொன்றில் பேசுகையில் சொன்னார்

ராஜேந்திரன் சிறு வயது முதலே கலைத்துறைத் தொடர்புடன்கழகத்தொடர்பும் கிடைக்கப் பெற்று வளர்ந்துள்ள நிலையினைதான் நன்கு அறிவேன்! அந்த வளர்ச்சிக்காக நான் ஏதும் செய்திட இயன்றதில்லை என்றாலும், அந்த வளர்ச்சியினைக் கண்டு கண்டு பெருமிதம் கொள்பவன் என்பதனைத் தெரிவித்துக் கொள்வதிலே எனக்கோர் தனி மகிழ்ச்சி!

துள்ளி விளையாடும் பிள்ளைப்பருவத்தினனாக ராஜேந்திரனை நாடக அரங்கத்திலே மட்டுமல்ல, வீட்டிலேயும் கண்டுள்ளவன். எனவே அரும்பு மீசையினனாகி, அழகு தவழ்ந்திடும் இளைஞனாகி, சாலையிலும் சோலையிலும் உலவி சிந்து பாடிடும் வாலிபனாகி நாடக அரங்கிலும், திரைப்படக் காட்சியிலும் மட்டுமல்லாமல்மெய்யுலகிலேயே கூட ராஜேந்திரன் உலவி உலகினருக்கு கலைத் தொண்டு மூலம்களிப்பூட்டி வருவது காணும் போது அரும்பு கண்டோன். அது மலராக மணம் பரப்பிடுதலும் காணுகிறபோது பெற்றிடும் மகிழ்ச்சி, பெருமிதம் எனக்கு என்போல் பலருக்கு.

மிகைபடுதலை உணர்ந்து இயற்கையான ஓர் அளவு அறியப்பெற்று, நடிப்பினை பக்குவப் படுத்திக் கொள்வது தனியானதோர் திறமை கடுமையான பயிற்சி பெறக்கூடிய திறமை அந்தப்பயிற்சியைராஜேந்திரன் என்நண்பர் முத்தமிழ் கலாவித்வரான டி. கே. சண்முகம் நாடகக் குழுவினிலே ஆண்டு பல ஈடுபாடு கொண்டு பெற்றவர்!

### ஒற்றுமையோ ஒற்றுமை!

இன்றைய படவுலகில்நாயகர்களாகவிளங்கும் சிவாஜிக்கும், எம். ஜி ஆருக்குமிடையே ஒரு நெருங்கிய ஒற்றுமை இருக்கிறது. அது என்ன தெரியுமா?

'ராமாயண'த்தில் பரதனாகவும் 'மனோகரா'வில் மனோகரனாகவும் இருவருமே நடித்துப் புகழ் வாங்கியிருக்கிறார்கள்.

ஆனால், ஒரேஒருவேற்றுமை!

சிவாஜி அந்தப் பாகங்களை நடித்ததுதிரையில்; எம். ஜி. ஆர். நடித்தது நாடகத்தில்!

## கலை மலர்

### நம்பலாம் நடந்தது!

ஹாலிவூட்டில்சில பெரிய மனிதர்கள் ஒன்றுகூடி நடிகர் மார்லன் பிராண்டோவிற்கென்று விருந்து ஒன்று ஏற்பாடுசெய்திருந்தார்கள்.

பளபளக்கும் ஆடை அணிந்து ஜம்மென்று பிரமாண்டமான காரில் அவர் வந்து இறங்குவார் என்றுதான் அங்கிருந்தோரனைவரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள் ஆனால் மார்லன் பிராண்டோவோ, தோள்பட்டையில் தையல் பிரிந்து தொங்கும் கோட்டும் முழங்காலில் கிழிந்திருந்த பேண்டோடும ஒரு சிறியகாரில் வந்து இறங்கினர்

அவரது கோலத்தைக் கண்டு அசந்துபோய்விட்ட நண்பர்களைப் பார்த்து மார்லன் பிரண்டோ, ''முதன் முதலில் நான் ஹாலிவூட்டுக்கு வந்தபோது ஒருவேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் இரண்டு கோட்டு, ஒரு பேண்டோடுதான் வந்து சேர்ந்தேன். இப்போது பணம் வந்துவிட்டதென்பதற்காக பழைய நிலையை மறந்துவிடத் தயாராக இல்லை!''—என்றார் சிரித்துக் கொண்டே!

### அடுத்த மலரில்..

★ பத்திரிகை நிருபர் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்த ஹாலிவூட் நடிகை!

★ ஹாலிவூட் எழிலரசிகளின் இதயராஜா—முடிசூடா மன்னன்— இத்தாலிய நடிகர் மார்சலோ மஸ்டிராயானி பற்றி 'மேகலா' தொகுத்துத்தரும் சுவையான தகவல்கள்.

★ இன்னும் பல சினிமா உலகச் செய்திகள் — வாசகர்கள் படித்து எழுத ஒரு பகுதி!

இத்தனையும் அடுத்தமலரில் படித்துச் சுவையுங்கள்.

### சினிமா விமர்சனம்

# பூமாலை

யோகி

கணவனிடம், தான் ஏற்கனவே நள்ளிரவில் ஒரு அறிமுகமற்றவனிடம் சிக்கி அவனின் ஆசைக்குப் பலியாகி, அதனால் ஒரு குழந்தைக்குத் தாயாகியிருக்கும், ரகசியத்தை மனைவிவெளியிடும் பொழுது, கணவன் அவளைக் கட்டியணைப்பானா? எட்டி உதைப்பானா? தனது வளர்ப்புக் குழந்தைக்கு தம்பியின் மனைவி, பால் கொடுக்கும் காட்சியை நேரில் கண்டபின், அவனை விரும்புவாளா? வெறுப்பாளா? சந்தர்ப்பவசத்தினால்ஒருகுழந்தைக்குதாயாகிவிட்ட உண்மையை அண்ணிக்கு கூறும்போது, அவள் மன்னிப்பாளா? விரட்டுவாளா?

பூமாலை ஒரு புரியாதபுதிர். பெண்ணினத்திற்கு பெருமைதரும் தாய்மை, சில சமயங்களில் சந்தர்ப்பவசத்தினால் பெண்ணினத்திற்கே அவமானம் தேடிக்கொடுக்கின்றதென்பதை பூமாலை தெளிவாக விளக்குகிறது.

பூமாலையாக விஜயகுமாரி வருகிறார். தனது பாத்திரத்தை நன்றாக உணர்ந்து நடித்திருக்கிறார். சில காட்சிகளில் மௌனமாக நடிப்பதன்மூலம் பாராட்டைப் பெறுகிறார். ஆனால் ரத்தினமாக வரும் ராஜேந்திரன் நடிப்பில் அவ்வளவு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. பூமாலையின் அண்ணனாகவரும் அசோ

(2-ம் கலம் பார்க்க)

## 'விஜி'க்கு யோகம் அடிக்கிறது!

தமிழ்ச்சினிமா உலகின் கவர்ச்சிக் கன்னி நடிகை எல். விஜயலக்ஷ்மிக்கு இப்போது யோகம் அடிக்கத் தொடங்கியிருக்கிறது! இளம் சிட்டு 'விஜி'க்கு பல புதிய படகளில் நடிக்கும் வாய்ப்பு வலியவந்துகொண்டிருக்கிறது!



முன்னர் ஸ்ரீதரின் கல்யாணப் பரிசில் சரோஜாதேவியின் இடத்தில் நடிக்க ஏற்பாடாகியிருந்தும் துரதிர்ஷ்டவசமாக கடைசி நேரத்தில் விஜிக்கு அந்தச் சந்தர்ப்பம் கிட்டாமல் போய்விட்டது! ஆனால் இப்போது ஸ்ரீதரின் படத்தில் நடிப்பதற்கு நல்லதொரு 'சான்ஸ்' கிடைத்துள்ளது.

கோவைச் செழியன் தயாரித்து, ஸ்ரீதர் டைரக்ட் செய்துவரும் ''காலமெல்லாம் காத்திருப்பேன்'' படத்தில் நடிப்பதற்காக 'விஜி' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராம்! ஜெயலலிதா நடித்து இடையில் அவரை விலக்கிவிடப்பட்டதால், அந்தப் பாகத்தில் அதாவது கதாநாயகி வேஷத்தில் நடிப்பதற்கு 'விஜி' ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

'விஜி' உனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3-வது டெஸ்டில் புச்சரின் அற்புதசாதனை!

கிளிநொச்சி

## பொதுச்சேவை கழகம் வெள்ளிக்கிண்ணம் பெற்றது!

கிளிநொச்சி, செவ்

கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மென்பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி பொதுசேவைப் பொழுது போக்குக் கழகத்துக்கும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிளிநொச்சி பொதுசேவைக் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

கிளிநொச்சி றெட்றிக்ஹோ மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பொதுச்சேவைக் கழகம் 34 ஒட்டங்களை எடுத்தது. இதில் எஸ். சபாரத்தினம் 13 ஒட்டங்களை எடுத்திருந்தார். எதிர்க்கோஷ்டியைச் சேர்ந்த என். ராஜரத்தினம் 14 ஒட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுகளையும், ஆர். ரகுநாதன் 19 ஒட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும் வீழ்த்தியிருந்தவர். இரண்டாம் இன்னிங்ஸில் இக்கோஷ்டி 28 ஒட்டங்கள் எடுத்தது. இதில் டாக்டர் எஸ். சூசைப்பிள்ளை 15 ஒட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தார்.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் தனது முதல் இன்னிங்ஸில் 23 ஒட்டங்களும், இரண்டாம் இன்னிங்ஸில் 29 ஒட்டங்களும் எடுத்தது. இரண்டு இன்னிங்ஸிலும் எதிர்க்கோஷ்டியைச் சேர்ந்த எஸ். வி. ஈ. பெர்னாண்டோ 7 விக்கட்டுகளையும், எஸ். செபரத்தினம் 12 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இப்போட்டிக்கான கிண்ணத்தை பொதுசேவைக் கழகம் சுவீகரித்தது.

வவனியா

## சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு நான்கு வெற்றிக் கிண்ணங்கள்

வவனியா, செவ்

வவனியா தமிழ் வட்டார பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி வவனியா தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது இவ்வாண்டுப் போட்டிகளில் மொத்தம் 22 பாடசாலைகள் பங்கு பற்றின. பிரதம விருந்தினராக மாவட்டவித்தியாதரிசி திரு. இ. திருநாவுக்கரசு கலந்துகொண்டார். திருமதி திருநாவுக்கரசு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், அரசாங்க அதிபர் டி. எம். பி. தசநாயக்கா, வவனியா நகரசபைத் தலைவர் திரு. ம பொன்னையா ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

வட்டார வித்தியாதரிசி திரு. மு. கேதுசிகாமணி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. இ. திருநாவுக்கரசு பேசுகையில் வரலாற்றிலே போற்றப்படுகிறவர் எல்லோரினது வாழ்க்கையில் தோல்வியும்இடம் பெறுகிறது என்றும் மாணவர்களும் வெற்றியைக் குறிக்கோளாகக்கொண்டு எக்காரியத்திலும் முயல வேண்டும் என்றும் கூறினார்.

அரசாங்க அதிபர் பேசுகையில் விளையாட்டுப்போட்டிகள் மூலம் உடல் வளர்ச்சி மட்டுமல்லாது உளவளர்ச்சியுடன் நாட்டு வளர்ச்சியும் ஏற்படுகின்றது எனக் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் எம். பி. பேசுகையில், வவனியா மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை திறமான மைதானமாக்கித் தருவதற்கு கூடியவிரைவில் முயற்சியெடுப்பதாகக் கூறினார்.

வெற்றிக் கிண்ணங்கள் பெற்ற பாடசாலைகள்:.

கீழ்ப்பிரிவு (ஆண்கள்):- சேமமடு அ த க பா, கீழ்ப்பிரிவு (பெண்கள்): இறம்பைக்குளம் றோ க பா.

மத்தியபிரிவு (ஆண்கள்):- சைவப்பிரகாச வித்தியாசாலை, மத்திய பிரிவு (பெண்கள்): சைவப்பிரகாச வித்தியாசாலை.

மேற்பிரிவு (பெண்கள்): சைவப்பிரகாச வித்தியாசாலை, மேற்பிரிவு (ஆண்கள்): சைவப்பிரகாச வித்தியாசாலை.

### இலவச படக்காட்சி

சுழிபுரம், செவ்வாய்

காரைநகர் நீலிப்பந்தனை அம்பாள் சன சமூக நிலைய முன்றலில் இம்மாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை அமெரிக்க தகவல் பகுதியினர் ஓர் இலவச படக்காட்சியை காண்பிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

ஃ

தொல்புரம், செவ்.

தொல்புரம் மத்திய சன சமூக நிலைய வாசிகசாலை விளையாட்டு மைதானத்தில் இலங்கை அமெரிக்க தகவல் பகுதியினர் ஓர் இலவச படக்காட்சியை இம்மாதம் 7-ந் திகதி மாலை 7-30 மணிக்கு காண்பிக்க ஒழுங்குசெய்துள்ளனர்.

### சிவதேவாலய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்வாய்

வானவன் மகாதேவி ஈஸ்வரஉடையார் சிவதேவாலய தர்மகர்த்தா சபையின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போஷகர்: திரு வி சோமசுந்தரம், தலைவர்; திரு என் பாலசுப்பிரமணியம், உப-தலைவர்: திருமதி கு வள்ளியம்மை, இணைக் காரியதரிசி: எஸ் சிவலிங்கம், என் அப்புத்துரை, தனாதிகாரி: திரு எஸ் தம்பிஐயா.

தர்மகர்த்தாசபை திருவாளர்கள்: எம் ஸ்ரீகாந்தா, ஏ எஸ் ஆறுமுகம் அதையல் பாகர், கே எம் பாலசுப்பிரமணியம், என் பாலசுப்பிரமணியம்.

### காமராஜ் புறப்பாடு

புதுடில்லி, ஜூலை 5

காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் வருகிற 22-ம் திகதி மாஸ்கோ புறப்படுவார். ரஷ்யாவிலும், மற்றும் 5 கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அவர் 18 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார் என அறிவிக்கப் பட்டது.

அணிவகுப்பு: [illegible] சிசி த க பா.

## ஆட்டமிழக்காமல் 209 ஒட்டங்கள் எடுத்தார்

### மேற்கிந்திய கோஷ்டியின் கடைசிநேர ஆட்டம் நிலைமையை மாற்றிவிட்டது

— "அவதானி" —

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்டில் பல எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 3-வது டெஸ்டின் முதல் இனிங்ஸில் 5 ஒட்டங்கள் எடுத்திருந்த மேற்கிந்திய துடுப்படி வீரர் புச்சர் அற்புதமான முறையில் விளையாடி ஆட்டமிழக்காமல் இரண்டு செஞ்சரிகளுக்குமேலாக(209)ஒட்டங்கள் எடுத்திருப்பதும், முதல் இனிங்ஸில் 3 ஒட்டங்கள் மட்டுமே எடுத்த காப்டன் ஸோபர்ஸ் 94 ஒட்டங்கள் விளாசியிருப்பதும 3-வது கிரிக்கெட் டெஸ்டில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சங்களாகும். இதற்கு உச்சம் வைத்தாற் போல மேற்கிந்தியா 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 482 ஒட்டங்களை எடுத்திருப்பது - ஸோபர்ஸின் திறமையை நிரூபித்துவிட்டது!

நோட்டிங் ஹாமில் நடைபெற்ற 3-வது கிரிகெட் டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியா தனது முதல் இனிங்ஸில் மொத்தம் 235 ஒட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து கோஷ்டி 325 ஒட்டங்கள் எடுத்தது. இரண்டாவது இனிங்ஸை கடந்த திங்கட்கிழமை தொடர்ந்து விளையாடிய மேற்கிந்தியா 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் 482 ஒட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து தனது இரண்டாது இனிங்ஸை ஆரம்பித்தது ஆட்ட நேர இறுதிவரை விக்கெட் எதுவும் இழக்காமல் மொத்தம் 30 ஒட்டங்கள் எடுத்தது.

மேற்கிந்திய கோஷ்டியின் இரண்டாவது இனிங்ஸில் ஹண்ட்-12, பி லேஷ்லி -23, ஆர் பி கன்ஹாய் -63, ஸோபர்ஸ்-94, நேர்ஸ்-53, ஹால்போர்ட் (ஆட்டமிழக்கவில்லை) -17, புச்சர் (ஆட்டமிழக்கவில்லை) 209 ஒட்டங்கள் எடுத்திருந்தனர்.

#### முடிவு என்ன?

நேற்று இறுதி நாளாகும். 3-வது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெறுவதென்றால் முதலில் 393 நிமிடங்களுக்குள் 362 ஒட்டங்களை அது எடுக்க வேண்டும். இது அசாத்தியம். ஆகையினால் இக் கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெறுமா என்பது நடைபெறாததொன்று. அதே நேரத்தில் மேற்கிந்தியா வெற்றி பெறுமா என்பதும் சந்தேகமே. ஒரே நாளில் மளமளவென்று இங்கிலாந்தின் பத்து விக்கெட்டுகளை மேற்கிந்தியா கைப்பற்றினால் கிரிக்கெட் உலகில் அது ஒரு அசாதரண நிகழ்ச்சியாகிவிடும். ஆகையினால் 3-வது டெஸ்டின் முடிவும் வெற்றி தோல்வியின்றியே ஆகிவிடும் என்று தீர்மானித்து விடலாம்!

#### சாதனைகள்

3-வது கிரிக்கெட் டெஸ்டில் புச்சர் 209 ஒட்டங்களை எடுத்திருப்பதன் மூலம் பெரிய சாதனையொன்றை ஏற்படுத்தி இருக்கிறார்! இந்த மூன்று டெஸ்டுகளில் யாருமேஇச்சாதனையை புரியவில்லை! இதற்குரிய பாராட்டு ஸோபர்ஸையே போய்ச் சேருகிறது. எதிர் [illegible] ஹாய், ஹண்ட் எல்லோரும் இம்முறை குறைந்த ஒட்டங்கள் எடுத்திருக்கையில் அதற்கு மாறாக புச்சர், ஒட்டங்களை விளாசித் தள்ளியிருக்கின்றார்! இது எதனை நிரூபிக்கிறதென்றால் மேற்கிந்திய கோஷ்டியின் தரம் மிகவும் சிறந்ததென்பதுடன் ஸோபர்ஸ் ஒரு அபாரமான காப்டன் என்பதையுமே!

இங்கிலாந்து கோஷ்டியைப் பொறுத்த மட்டில் அதன் விளையாட்டு இம்முறைபாராட்டத்தக்க விதத்தில் அமைந்திருந்தாலும் - கடைசி நிலைமை முடிவை மாற்றி விட்டது!

## தேசியப் பற்றுள்ளவர்களால்தான் நாடு முன்னேற்றமடையும்'

### கண்ணாடி தொழிற்சாலை திறப்பு விழாவில் மந்திரி

திருகோணமலை, செவ்வாய்

''ஏ எஸ். எம். ஜெகநாதனைப் போன்று தேசியப் பற்றுள்ள வர்த்தகர்கள் இலங்கையிலிருந்தால் நிச்சயமாக இலங்கை முன்னேற்றமடைந்துவிடும்'' என்று ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம் திருச்செல்வம் ஜெகநாதன் கம்பெனியாரின் லங்கா கண்ணாடித் தொழிற்சாலையை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மந்திரி பேசுகையில் குறிப்பிட்டதாவது: மந்திரி சபையில் சிறந்த ஒற்றுமை உண்டு அத்துடன் பிரதமர்தான் தமிழர்களின் சிறந்த நண்பன். பிரிட்டிஷ் கடற்படை நிலயம் இங்கே மூடப்பட்டபொழுது 8000 பேர் உத்தியோகமில்லாதுசெல்ல நேரிட்டது என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நிலைமை மாறும்பொழுது மக்களும் அதற்கேற்றாற் போல் தங்களையும் மாற்றிஅமைத்துக் கொள்ளவேண்டும்.

இன்றையதினம் திருமலைக்கு மாத்திரமல்லாது இலங்கை முழுவதற்குமே ஒரு பொன்னான தினமாகும் திருமலைக்கு மாநகர சபை அந்தஸ்து [illegible] ழங்கப்பட வேண்டுமென் [illegible] அரசாங்க அதிபரும்ஸ்த [illegible] ஸ்தாபன அதிகாரியும் [illegible] சிபார்சுசெய்துள்ளனர். ஆகையால் தற்பொழுது நிலவும் தண்ணீர் மின்சார விநியோகக்குறைபாடுகள் மாநகரசபை வந்ததும் நீங்கிவிடும்.

கைத்தொழில் உதவி மந்திரி திரு. ஷெல்டன் ஜெயசிங்கா இவ் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் திருமலையின் எதிர்காலம் சிறப்பாக அமைய நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன என்று குறிப்பிட்டார்.




### கொழும்பு

புதன் 6-7-66

(செய்திகள்: காலை 7-00. பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு — வீ. ராஜலிங்கம், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கிளாரினெட், 9-30 பாட்டு — ராஜமணிஐயர், 10-00 நேயர்விருப்பம்.


# கற்பூரம்

அரஸ்கோ 'மயில்'' மார்க் கற்பூரம்

எங்கும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகள் எங்கள் வான்களிலும் கீழ்க்காணும் விலாசங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

R. அரசரத்தினம் & கோ,

106, றெக்ளமேஷன் ரோட், கொழும்பு-11

அரஸ்கோ இண்டஸ்ட்ரீஸ்

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அம்மாவை எதிரி பொல்லால் அடித்ததைப் பார்த்தேன்"

## ஆனைக்கோட்டை கொலை வழக்கில் சிறுமி சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

'எதிரி காளிமுத்து தமயந்தியம்மாவை பொல்லால் அடித்ததைக் கண்டேன். அதன்பின் பெரியம்மாவை அடிக்க ஓடிவந்தார். நான் மற்ற அறையால் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, வெளியில் ஓடிவிட்டேன்''

ஆனைக்கோட்டை கொலை வழக்கில் 13 வயதான சுந்தரராம் சரோஜா சாட்சியமளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை ஆரம்பமாகு முன் நேற்றுக்காலை கோட்டார், சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்

65-ம் ஆண்டு அகஸ்ட் 2-ம் தேதி ஆனைக்கோட்டையில், கதிரவேலு காளிமுத்து என்பவர், திருமதி தமயந்தி ராஜமார்த்தாண்டனை கொலை செய்ததாகவும், திருமதி ராஜலட்சுமி தேவராசனை கொலை செய்ய முயற்சித்ததாகவும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் ஆர். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

சரோஜா மேலும் கூறியதாவது:

இவ்வழக்கில் இறந்த அம்மாவை எனக்குத் தெரியும். அந்த அம்மா வீட்டில்தான் சம்பவம் நடந்தசமயம் வேலைபரிர்த்தேன். அன்று நான் அடுப்படியில் தேங்காய் துருவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, ஐயோ என்ற சத்தம் கேட்டது. நான் அடுப்படி வாசலில் சென்றுபார்த்தேன் அந்தக் குரலை அடையாளம் கண்டு கொண்டேன்.

எதிரி காளிமுத்து தமயந்தி அம்மாவை பொல்லால் அடித்ததைக் கண்டேன். அதன்பின் பெரியம்மாவை அடிக்க அடுப்படிக்கு வந்தார். நான் மற்ற அறையினுல், குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியில் ஓடிவிட்டேன். தமயந்தி அம்மா விருந்தையில் விழுந்து கிடந்தார். அடுப்படியில், எதிரி, பெரியம்மாவை ஒருதடவை அடித்ததைக் கண்டேன். அதன்பின் படலை மட்டும் ஓடினேன். அச்சமயம் இராசையாவைத் தவிர வேறு யாரும் இல்லை. ராஜமார்த்தாண்டன் அச்சமயம் பாடசாலைக்குச் சென்று விட்டார். என்னையும், குழந்தையையும் அங்கு வந்தவர்கள் வேறு விட்டிற்கு கூட்டிச் சென்றார்கள். பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன்.

இன்று தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

# கிராமசபை தலைவர் பதவிநீக்கம்

கொழும்பு, செவ்

அத்தனகலைத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த எகோடபொத்த கிராமசபையின் தலைவர் திரு. ஏ. ஜி. டபிள்யு. செனிவரத்ன பதவிநீக்கம்செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் நேற்று அரசாங்க வர்த்தமானி மூலம் விடுத்திருந்தார்.

கிராமசபையின் பொது வருமானத்தின் பெயரால் கச்சேரியில் செலுத்தவேண்டிய 22,000 ரூபாவை செலுத்தத் தவறியதாக திரு. செனிவரத்னமீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

திரு. செனிவரத்ன சென்ற பொதுத்தேர்தலிலும் அதற்கு முன்னரும் திருமதி பண்டாரநாயக்காவை எதிர்த்து ஐ தே கட்சி சார்பில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. செனிவிரத்ன ஐ தே, கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் மந்திரி நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் என்று பார்லிமெண்டில் எதிர்க்கட்சி எம். பிக்கள் மந்திரியை குறை கூறினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# படுகாயம் விளைவித்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த சின்னப்பொடி சின்னெட்டி என்பவருக்கு படுகாயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த என். முத்துராஜா, நாகமுத்து சின்னத்தம்பி ஆகிய இருவர் மீதும் யாழ்ப்பாணம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாண நீதிபதி ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின் 1-ம் எதிரியை நிரபராதி என கருதிய நீதிபதி அவரை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். இரண்டாம் எதிரி சின்னத்தம்பி சம்பந்தமான விசாரணையை இம்மாதம் 19-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு எ அன்ரனி ஆஜரானர். (ந நி)

# தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கொழும்பு, செவ்வாய்

திரு. என். சண்முகதாசனின் இலங்கை தொழிற்சங்க சம்மேளன இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த சுமார் 50.000 தோட்டத் தொழிலாளர் இன்று வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் வேலைநிறுத்தம் இப்பொழுது நாலாவது வாரமாக நடைபெற்று வருகிறது.

# நன்றி நவிலல

யாழ்ப்பாணம் ஸ்ரீ பார்வதி அச்சக உரிமையாளர் திரு ப சிவஞானபேரதம் அவர்கள்சிவபதமடைந்ததையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அவரின் குடும்பத்தினர் தங்கள் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறார்கள். சி. ரவீந்திரன், அரியாலை 729

# அறிவித்தல்

குமுதம் சாறி வேக்ஸ் 9-7-66-ல் பெரியகடை 24/1 இலக்கக்கட்டிடத்திற்குமாற்றப்படுகிறது என்பதை யாழ் பிடவை வர்த்தகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் அறிவிக்கிறோம், குஞ்சம்கட்டுவதற்கு அனுபவம்வாய்ந்த பெண்கள் தேவை, 24/1, பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு நேரில் வரவும், 731

# லண்டன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஊழியர்களின் கடமை

வங்கி நிர்வாகம் சமரசத் திட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டதால் இப்போது வங்கி ஊழியர்களும் அதனைஏற்றுக்கொள்ளவேண்டியது அவர்களின் கடமையாகுமென்று தொழில் மந்திரி திரு. முகம்மது நேற்றிரவு 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார்.

வங்கி நிர்வாகிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்களோ என்ற பயம் இப்போது தெளிவாகிவிட்டது. அதனால் ஊழியர்களும் இதை ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். இல்லையென்றால் பொதுமக்களின் வெறுப்புக்கு அவர்கள் ஆளாக நேரிடும் என்று அவர் கூறினார்.

## வங்கி ஊழியர் சங்கத்தலைவர்

வங்கி ஊழியர்கள் சங்கத் தலைவரிடம் நமது நிருபர் தொடர்புகொண்டபொழுது சங்கத்தின் நிர்வாக சபை இன்று கூடவிருப்பதாகவும் அந்தக் கூட்டத்தில் ஒரு முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் கூறினர்.

## நிலைமை தொடர்ந்தால்

வங்கி ஊழியர் சங்கம் சமரசத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யுமாஞல் இப்பிரச்னையைத் தொழில் தகராறு சட்டத்தின்கீழ் கட்டாய மத்தியஸ்தத்திற்குத் தொழில் மந்திரி பாரப்படுத்தக்கூடிய நிலைமையுருவாகக் கூடுமென்று கருதப்படுகிறது.

## சந்திரிசபை கூடியது

மந்திரிசபை இன்று கூடி வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக ஆராய்ந்தது. பிரதமரின் சமரசத் திட்டம் பற்றியும் அதை யூனியன்கள் ஏற்க மறுத்ததுபற்றியும் தொழில்மந்திரியும், தொழில்இலாகா அதிகாரி திரு விஜயவிக்கிரமாவும் விளக்கம் தெரிவித்தனர். வேலைநிறுத்தத்துக்கு முடிவுகாண இருதரப்பினரும் தவறினால் தொழில்தகராறு சட்டத்தின் கீழ் சமரச முயற்சிக்கு அரசாங்கம் கட்டாயப்படுத்துவதுபற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இன்று நகரில் உள்ள வங்கிகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பொலிசார் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். எதுவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

## யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைவங்கி, மேர்க்கண்டைல் வங்கி, மக்கள் வங்கி ஆகியவை உட்பட மற்றும் வங்கி ஊழியர்களும் இன்று வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டனர். எதுவித அசம்பாவிதசம்பவமும் அறிவிக்கப்படவில்லை.

# சிறுவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் கடற்படையினர் தேடுதல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை எம் பி திரு. வி. நவரத்தினம், உள்நாட்டு வெளிவிவகார அமைச்சுக்குச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை கடற்படையினரும் தேடுதல் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

# 38 கோடி டாலர் வேண்டும்

வாஷிங்டன், ஜுலை 5

'பாகிஸ்தான் உதவிக்குழு' நாடுகளிடமிருந்து பாகிஸ்தான் நடப்புத் திட்டத்துக்கு 38 கோடி டாலர் கோரியிருக்கிறது.





எவ்வாறு

சன்லைட்

மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர், மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

IWT/S/3X88


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜுலை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org